மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

122—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***182—திரு. S. பழனி நாடார்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி நகராட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 544 குடிநீர்த் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு, நாளொன்றுக்கு 2,014 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 4.53 கோடி மக்களுக்கு வழங்கப்படுகிறது. முதல்நிலை நகராட்சியான தென்காசியின், தற்போதைய மக்கள்தொகை 78,891 ஆகும். இந்நகரின் தற்போதைய மக்கள்தொகையின் அடிப்படையில் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் தேவையான குடிநீர் அளவு 10.65 மில்லியன் லிட்டராகும். தென்காசி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பிலுள்ள தென்காசி–குற்றாலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் நாளொன்றுக்கு 1.70 மில்லியன் லிட்டர் குடிநீரும், நகராட்சிப் பராமரிப்பிலுள்ள தனி குடிநீர்த் திட்டம்மூலம் நாளொன்றுக்கு 4.50 மில்லியன் லிட்டர் குடிநீரும், ஆகமொத்தம் நாளொன்றுக்கு 6.20 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தென்காசி நகராட்சியில் குடிநீர் விநியோக மேம்பாட்டிற்காக, நகராட்சியின் உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு

2023 ஏப்ரல் 10]

107 கோடி ரூபாய் திருத்திய திட்ட மதிப்பீடு Tamil Nadu Water Investment Company *(*TWIC*) மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 2021–2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது தென்காசி நகராட்சி மற்றும் மூன்று ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 78 கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டு, பின்னர் கடையம், கீழப்பாவூர் ஒன்றியங்களையும் சேர்த்து, ஆக மொத்தம் 493 கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.400 கோடியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், தென்காசி நகராட்சிக்கு இடைக்கால மற்றும் உச்சகட்ட அளவாக நாளொன்றுக்கு முறையே 9.30 மில்லியன் லிட்டர் மற்றும் 12.60 மில்லியன் லிட்டர் குடிநீர் மொத்தத் தொகுப்பாக வழங்கப்படும். இதனைக் கூடுதல் ஆதாரமாகக் கொண்டு, தென்காசி நகராட்சியின் குடிநீர் விநியோக மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டபின், இந்த இரு திட்டங்களும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பெருந்தலைவர் காமராஜர் அவர்களை வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தென்காசி மாவட்டம், புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். இங்குள்ள தென்காசி நகராட்சிப் பகுதியில், பொதுமக்களுக்குப் போதுமான அளவு குடிநீர் கிடைக்கவில்லை. ஆகையால், குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தி பொதுமக்களுக்குக் குடிநீர் தேவையான அளவுக்குக் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு அரசு சார்பாக, இதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று அதிகாரிகள் சொன்னார்கள்.*

உறுப்பினர்கள் கேட்கிறபோது, அவர்களுக்கு நம்பிக்கையூட்டுகின்ற வகையிலே அந்த பதில் இருக்க வேண்டும்; அதேநேரத்தில் இந்த அரசின் சார்பாக எடுக்கப்படுகிற திட்டங்கள் அவர்களுக்குச் சொல்லப்பட வேண்டும் என்பதற்காகத்தான், இந்தத் திருத்திய விடையை நான் அவர்களிடம் எழுதி வாங்கினேன். திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுவிட்டது. நிதி ஆதாரங்களுக்காக அது சென்றிருக்கிறது. நிதி கிடைத்தவுடன், விரைவிலே அந்தத் திட்டத்தை நிச்சயமாக துவக்கி அனைத்து மக்களுக்கும் தண்ணீர் கொடுக்கிற பணி நிறைவேற்றப்படும். ஓரிரு மாதங்களில் அதைக் கொண்டுவர முடியும் என்று கருதுகிறேன். நிதிக்காகத்தான் தற்போது தாமதப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தென்காசி தொகுதியில், புதிதாக தரம் உயர்த்தப்பட்ட சுரண்டை நகராட்சியில் தனி குடிநீர்த் திட்டமும் மற்றும் மேலகரம், குற்றாலம், இலஞ்சி, சுந்தரபாண்டியபுரம் ஆகிய பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்தியும், சீரான குடிநீர் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியைச் சுற்றியிருக்கிற பேரூராட்சிப் பகுதிகள் மொத்தத்திற்கும் அரசு சார்பாக எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகளையும் நான் எழுதி வாங்கியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சுரண்டை பகுதி, புதிய நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், 2040 ஆம் ஆண்டில் மக்கள்தொகை எண்ணிக்கை சுமார் 1 இலட்சத்திற்கும் மேலாக உயர்ந்துவிடும் என்பதையும் கருத்தில்கொண்டுதான் புதிய திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் முழுமையாக 493 hamlets-ல் அவர்களுக்குப் பயன்படுகிற

2023 ஏப்ரல் 10]

வகையில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நிதி ஆதாரம் கிடைக்கப்பெற்றவுடன், திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நிச்சயமாக எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி

***38189—திரு. எம்.ஆர். காந்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓர் அரசு Polytechnic *கல்லூரியும், ஓர் அரசு நிதியுதவிபெறும்* Polytechnic *கல்லூரியும் மற்றும் 19 சுயநிதி* Polytechnic *கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், கன்னியாகுமரி மாவட்டத்தில் காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 130 கோடி இந்தியர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று இந்திய தாய்த் திருநாட்டின் மாண்புமிகு பிரதமர் அவர்கள்*